**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 34/2012 P.W.6/L.W.10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. வெங்கடேஷ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 01.07.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது காவல்துறையில் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2010ம் ஆண்டு இரணியல் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது கருங்கல் காவல்நிலைய பொறுப்பு ஆய்வாளராக இருந்த போது 20.12.2010ம் தேதி கருங்கல் காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு. ஜின்னா அவர்களால் பதிவுச் செய்யப்பட்ட கருங்கல் காவல்நிலையக்குற்ற எண். 556/2010 சட்டப்பிரிவுகள் 304 எ இ.த.ச மற்றும் உ/இ 134 மோட்டர் வாகன சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து எனது விசாரணைக்கு வைத்ததை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2. மேற்படி வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான்20.12.2010ம் தேதி காலை 07.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள்சுனில் ராம் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆகும்.**

3. பின்னர் 08.00 மணிக்கு சம்பவயிடத்திலிருந்து புறப்பட்டு 09.00 மணிக்குஆசாரிபள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்று பிணவறையில் வைக்கப்பட்டிருந்த இவ்வழக்கில் இறந்துபோன ராஜன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்ட அறிக்கை தயார் செய்தேன். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்னர் தலைமை காவலர் அசோக்ராஜ் என்பவர் மூலம் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக மருத்துவர் வசம் வேண்டுகோள் கடிதத்துடன் ஒப்படைத்தேன். பின் சாட்சிகள் எஸ்தர், கிருஷ்ணன், ஜாண் பால்வின், சுனில்ராம், ஜெயக்குமார் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 22.12.2010ம் தேதி இவ்வழக்கின் எதிரி அரசுப்பேருந்து ஓட்டுனர் மனோகரன் என்பவர்

காவல்நிலையத்தில் ஆஜரானவரை 12.15 மணிக்கு கைதுச் செய்து 13.00 மணிக்கு தக்க ஜாமீனில் விடுவித்தேன்.

5. இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களை வாகன தணிக்கை அதிகாரியிடம் வாகன ஆய்வுக்கு ஆஜர்படுத்த நிலையத்தில் உள்ளவர்களை அறிவுறுத்தினேன். பின்னர் நான் பணிமாறுதலில் சென்றபடியால் வழக்கு கோப்பை நிலையத்தில் ஒப்படைத்தேன்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

1. எனது விசாரணையை எந்த தேதியில், எந்த நேரத்தில் தொடங்கினேன் என்றால் 20.12.2010 அன்று காலை 07.15 மணியளவில் தொடங்கினேன். விபத்து சம்மந்தமாக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையிலிருந்து தகவல் வந்ததா அல்லது அன்னை மருத்துவமனையிலிருந்து தகவல் வந்ததா என்றால் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையிலிருந்து தகவல் வந்தது. நான் விசாரணை மேற்கொள்ளும் போது புகார் மனுவில் பேருந்தின் பதிவெண் கூறப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் வழித்தடம் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது விசாரணையில் மேற்படி பேருந்தின் வழித்தடம் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கருங்கல் – பள்ளியாடி செல்லும் பேருந்தாகும். பேருந்தின் தடம் எண் என்ன என்றால் 46 F ஆகும்.

2. எனது விசாரணையின் படி 46 A தடம் எண் கொண்ட பேருந்து விபத்தில் சம்மந்தப்பட்டுள்ளதாக துலங்குகிறது என்றால் சரிதான். 46 A தடம் எண் கொண்ட பேருந்தின் பதிவெண் என்ன என்றால் TN.74 N.0742 ஆகும். 46 F தடம் எண் கொண்ட பேருந்தின் பதிவெண் என்ன என்றால் விசாரித்தோம். ஆனால் விசாரணையில் பதிவுச் செய்யவில்லை. பதிவெண்ணை தெரிந்துக்கொண்ட பிறகு அதை ஏன் நான் எனது விசாரணை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரியான பதிவெண்ணை தெரிந்துக்கொண்டதால் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள 46 F தடம் எண் கொண்ட பேருந்தின் பதிவெண்ணை நான் குறிப்பிடவில்லை.

3. மேற்படி பதிவெண்ணை நான் எனது விசாரணையில் குறிப்பிடாததற்கான காரணத்தை எனது விசாரணையில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் தெரிந்துக்கொண்ட 46 F தடம் எண் கொண்ட பேருந்து கருங்கலில் எப்போது புறப்பட்டு பள்ளியாடியில் எப்போது சென்றடைகிறது என்றால் நினைவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக பேருந்து ஓட்டுனரை எப்போது கைது செய்தேன், வாகனத்தை எப்போது ஆய்வுக்கு உட்படுத்தினேன் என்றால் 22.12.2010 அன்று நிலையத்தில் ஆஜரானவரை 12.15 மணிக்கு கைதுச் செய்து 13.00 மணிக்கு தக்க ஜாமீனில் விடுதலைச் செய்து சம்மந்தப்பட்ட வாகனத்தை மோட்டார் வாகன தணிக்கை அதிகாரியின் ஆய்வுக்கு உட்படுத்த காவல் நிலையத்தில் அறிவுறுத்தினேன்.

4. இரண்டு பேருந்துகள் வழக்கில் சம்மந்தப்பட்டுள்ள நிலையில் வழக்கில் சேர்த்துள்ள பேருந்தை எதிரி தான் ஓட்டினார் என்ற விவரத்தை சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் விசாரித்தேன், வாக்குமூலம் பதிவுச் செய்யவில்லை. நான் இந்த வழக்கில் செய்த தவறுகளை மறைப்பதற்காக விசாரித்தேன், வாக்குமூலம் பதிவுச் செய்யவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்மந்தப்பட்ட பேருந்தை யார், எத்தனை மணிக்கு தணிக்கைக்கு உட்படுத்தினார்கள் என்ற விவரம் எனது விசாரணையில் தெரிய வந்ததா என்றால் நான் பணி மாறுதலில் சென்றபடியால் தெரியவில்லை.

5. ஆய்வுக்கு உட்படுத்திய பேருந்தில் இரத்தக்கறை மற்றும் டயர்மார்க் எதுவும் இருந்ததா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பொதுவாக பெரிய வாகனம் ஒன்று இரண்டுசக்கர வாகனத்தில் மோதும் போது சேதராம் அடைய வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்த ஆய்வாளர் தணிக்கை அறிக்கையில் சேதங்கள் எதுவும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அதைப்போல் பேருந்திலும் சேதம் எதுவும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேலும் அவரது அறிக்கையில் இரத்தக்கறை மற்றும் டயர்மார்க் எதுவும் இருந்ததாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். எனது விசாரணையின் படி இருசக்கர வாகனத்தில் பொருட்களுடன் அவரும் அவரது மனைவி, பிள்ளைகளுடன் நின்றுக்கொண்டிருந்த நபர் மீது பேருந்து ஏறியதாக தான் எனது விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தின் அருகில் நின்றதாக குறிப்பிட்டுள்ளேன்.

6. எனக்கு பின்பு வந்த ஆய்வாளர் தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் அவருடன் மனைவி, குழந்தைகள் இருந்ததாக குறிப்பிட்டுக்கூறவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்து எத்தனை நாள், எத்தனை மணி நேரம் கழித்து எங்கள் காவல்நிலையத்திற்கு தகவல் வந்தது என்றால் சம்பவம் நடந்ததிலிருந்து சுமார் 12 மணி நேரம் கழித்து காவல்நிலையத்திற்கு தகவல் வந்தது. எதிரிக்கும், காவல் ஆய்வாளர், இசக்கிமுத்துவிற்கும் முன்விரோதம் இருந்த விவரம் எனக்குத் தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. எதிரியின் மீது துறை சார்ந்த நடவடிக்கையோ, வேறு விபத்து வழக்குகளோ இல்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

7. வழக்கில் எதிரி ஓட்டி வந்த வாகனம் விபத்தில் சம்மந்தப்படவில்லை என்றால் சரியல்ல. 46A வழித்தட எண் கொண்ட பேருந்துகள் 4 முதல் 5 உள்ளது என்றும் அதைப்போல் 46F வழித்தட எண் கொண்ட பேருந்துகள் 4 முதல் 5 உள்ளது என்றும் எனது விசாரணையில் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். எனவே, சம்பவநேரத்தில் எந்த பதிவெண் கொண்ட வாகனம் சென்றது என்பதை தெரிந்துக்கொள்ளமுடியாமல் எதிரி மீது ஆய்வாளருக்குள்ள முன்விரோதம் காரணமாக எதிரியை இவ்வழக்கில் பொய்யாக சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. அதனால் தான் புகார் மனுவிலும், அ.சா1ன் விசாரணையிலும் வெவ்வேறு தடம் எண் கொண்ட பேருந்துகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8. நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அதை அ.சா1 பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளார் என்றாலும் சரியல்ல. அ.சா1 சம்பவத்தை பார்க்காததால் தான் முதல் தகவல் அறிக்கைபதிவுச் செய்ய காலதாமதம் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், வழக்காவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டு உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையில் முழு கவனம் செலுத்தி விசாரணை மேற்கொண்டிருந்தால் விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனத்தின் பதிவெண்ணை கண்டுபிடிருத்திருக்க முடியும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.